இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

ஆசிரியர் கல்வியியில் முதுகலைமாணி நிகழ்ச்சித் திட்டம்

இறுதிப் பரீட்சை 2007 - பகுதி **II**

**ESP 2470** – ஆரம்பமட்ட தமிழ் மொழி

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 06.06.2007 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

எவையெனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. (i) "எண்ணக்கரு விருத்திக்கு மொழிவிருத்தி அவசியமானது" இக்கூற்றினை விளக்குக.

   (ii) எண்ணக்கரு உருவாக்கம் தொடர்பாக விளக்கம் அளித்த உளவியலாளர்கள் இருவரது பெயரைக் குறிப்பிட்டு அவர்களது கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விபரிக்க.

   (iii) ஆரம்ப வகுப்பு மாணவரிடம் எண்ணக்கரு உருவாக்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாட்டை விளக்குக.

2. ஆரம்ப வகுப்பு மாணவரைக் கருத்திற் கொண்டு பின்வருவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

   (i) ஆக்கச்சிந்தனை விருத்திக்கான செயற்பாடுகள்

   (ii) கிரகித்தற் திறன் விருத்திக்கான செயற்பாடுகள்.

   (iii) இலக்கியங்களை நயக்கும் திறன் விருத்திக்கான செயற்பாடுகள்.

3. (i) முன்மொழித்திறன் விருத்தி என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது?

   (ii) முன்மொழித்திறன் விருத்தி தொடர்பாக ஆரம்பவகுப்பு மாணவர்களிடம் கவனிக்க வேண்டிய அம்சங்கள் பற்றி விபரிக்க.

   (iii) "அடிப்படை மொழித்திறன்களை ஒன்றிணைத்தே தமிழ்மொழி கற்பித்தல் இடம்பெற வேண்டும்" இக்கூற்று தொடர்பாக உங்கள் அபிப்பிராயத்தை உதாணங்களுடன் விளக்குக.

4. (i) கணிப்பீடு, மதிப்பீடு என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்திக் காட்டுக.

(ii) முறைசார்ந்த கணிப்பீடு, முறைசாராத கணிப்பீடு என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன? முதன்மை நிலை வகுப்பிற்குப் பொருத்தமான மொழி தொடர்பான முறைசாராக் கணிப்பீடுகள் பற்றி விபரிக்க.

(iii) கணிப்பீட்டின் மூலம் பெறப்படும் தரவுகள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு எத்துணை அளவிற்கு உதவுமென ஆதாரத்துடன் நிறுவுக.

5 (i) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழி விருத்தியில் சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக

(ii) இலங்கையில் சிறுவர் இலக்கிய விருத்திக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(iii) வகுப்பறை கற்பித்தலில் இச்சிறுவர் இலக்கியங்களை எத்துணையளவிற்குப் பயன்படுத்தலாம் என ஆராய்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று பற்றிக் குறிப்பு எழுதுக.

(i) ஆரம்ப வகுப்புகளில் விளையாட்டு மூலம் மொழிகற்பித்தல்

(ii) சிறுவர் கவிதைகளின் சிறப்பியல்புகள்.

(iii) ஆரம்பவகுப்பு மாணவர்களின் கேட்டல் - பேச்சுத்திறன் விருத்தியில் ஆசிரியரின் வகிபங்கு.

(iv) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழித் தேர்ச்சியில் ஊடகங்களின் பங்கு.

(பதிப்புரிமை பெற்றது)